# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අති විශෙෂ  அதிவிசேஷமானது**

අංක 2326/31 – 2023 අප්‍රේල් මස 04 වැනි අඟහරුවාදා – 2023.04.04

***2326/31 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**நீதிச்சேவைகள் ஆணைக்குழு**

**நீதிச்சேவை ஆணைக்குழுவின் விதிகளைத் திருத்துதல்**

இலங்கைச் சனநாயக் சோசலிசக் குடியரசின் 1978 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 08 ஆம் திகதியுடைய 14 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானியின் அரசாங்க அறிவித்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் விதிகளுக்கு அமைவாக II ஆம் பிரிவில் "நீதிமன்ற அதிகாரிகளை நியமித்தல், பதவி உயர்வு மற்றும் இடமாற்றம்" கீழ் 06 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் நீக்கப்பட்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதியுடைய 2024/45 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் அரசாங்க அறிவித்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள தகைமைகள் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கு அமைவாக நீக்கப்பட்டு கீழ்வரும் தகைமைகள் உள்ளடக்கப்படுவதாக இத்தால் அறிவுறுத்தப்படுகின்றது.

**இலங்கை நீதிச் சேவையின் II ஆவது வகுப்பின் I ஆவது தரத்திற்குரிய (நீதிவான்) பதவி**

தகைமைகள்

(அ) தொழில் நியாய சபையில் தலைவராக இரண்டு வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) நான்கு வருடங்களுக்கு குறையாத காலம் செயற்பாட்டு ரீதியிலான வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அல்லது ஈடுபட்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) ஏதேனுமொரு அமைச்சில் அல்லது அரச திணைக்களம் ஒன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் அல்லது வேறு அரச நிறுவனம் ஒன்றில் சட்ட அதிகாரியாக/சட்ட ஆராய்ச்சி உத்தியோகத்தராக நான்கு வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தைக் கொண்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) ஏதேனுமொரு கம்பனியில் அல்லது வங்கியில் அல்லது நிறுவனத்தில் சட்ட அதிகாரியாக நான்கு வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தை கொண்டவராகவும் அக் காலப்பகுதியில் தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் தோன்றிய வழக்கறிஞராகவும் இருத்தல் வேண்டும்.

*குறிப்பு :-* மேலே (ஆ), (இ) மற்றும் (ஈ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள "நான்கு வருடங்களுக்கு குறையாத" சேவைக் காலம்/செயற்பாட்டு ரீதியான தொழில்வாண்மை காலத்தை கணக்கிடும்போது, மேலே (ஆ), (இ) மற்றும் (ஈ) யில் குறிப்பிடப்படும் சேவைக் காலம்/செயற்பாட்டு ரீதியான தொழில்வாண்மைக் காலம் என்பன கூட்டாக கருத்தில் கொள்ளப்படும்.

**தொழில்நியாய சபையின் தலைவர் பதவி - தரம் II**

(அ) நான்கு வருடங்களுக்கு குறையாமல் செயற்பாட்டு ரீதியாக வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அல்லது ஈடுபட்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) ஏதேனுமொரு அமைச்சில் அல்லது அரச திணைக்களம் ஒன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் அல்லது வேறு அரச நிறுவனம் ஒன்றில் சட்ட அதிகாரியாக/சட்ட ஆராய்ச்சி உத்தியோகத்தராக நான்கு வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தைக் கொண்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) ஏதேனுமொரு கம்பனியில் அல்லது வங்கியில் அல்லது நிறுவனத்தில் சட்ட அதிகாரியாக 04 வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தை கொண்டவராகவும் அக் காலப்பகுதியில் தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் தோன்றிய வழக்கறிஞராகவும் இருத்தல் வேண்டும்.

*குறிப்பு:-* மேலே (அ), (ஆ) மற்றும் (இ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள "நான்கு வருடங்களுக்கு குறையாத" சேவைக் காலம்/செயற்பாட்டு ரீதியான தொழில் வாண்மைக் காலத்தை கணக்கிடும்போது, மேலே (அ), (ஆ) மற்றும் (இ) யில் குறிப்பிடப்படும் சேவைக் காலம்/செயற்பட்டு ரீதியான தொழில்வாண்மைக் காலம் என்பன கூட்டாக கருத்தில் கொள்ளப்படும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

என். எஸ். சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2023.03.30

EOG 03 - 0399